


# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU




## ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## அல்லாஹ்வின் அடையாளங்கள்

(பகுதி 4)

03 April 2020

(09 Shabaan 1441 A H )

ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

Phone No :- 917502272774

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# *The Signs of Allah* *(Pt.4)*

## *அல்லாஹ்வின் அடையாளங்கள் (பகுதி 4)*

**CORONAVIRUS / COVID-19 (THE PANDEMIC)**

**கொரோனா வைரஸ்/கோவிட் - 19 (தொற்று நோய்)**

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹுூத், தஅவ்வுசு மற்றும் அல்.ஃ.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுூமா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

இறைத் தூதராகவும், இந்த நூற்றாண்டில் நம்பிக்கையை புதுப்பிப்பவராகவும் தோன்றிய என் உண்மைக்கு ஆதரவாக அல்லாஹ் பல அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டினான். கடந்த நூற்றாண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் உண்மைக்கு ஆதரவாக பிளேக்கின் அடையாளம் உட்பட பல அடையாளங்கள் இருந்தன.

“நமது போதனைகள்” என்ற அவரது புத்தகத்தில் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் எழுதுகிறார்.

**“வானத்திலிருந்து ஆணை பிறக்காமல் பூமியில் எந்த ஆபத்தும் ஏற்படுவதில்லை. வானத்திலிருந்து கருணை இறங்காமல் பூமியில் ஏற்பட்ட ஆபத்தும் நீங்குவதுமில்லை”.**

**(Our Teaching - இமாம் மஹ்தியின் இனிய போதனைகள்)**

கொரோனா வைரஸ் தொற்று நோயைப் பொறுத்தவரை, இது இறைவனிடமிருந்துள்ள ஒரு கடுமையான எச்சரிக்கை, பகைமையில் தொடர்ந்து இருப்பவர்களுக்கு இது ஒரு எச்சரிக்கையாகும். ஏனென்றால் நடைமுறையில் உள்ள பாவம், விரோதப்போக்கு மற்றும் மக்களின் அலட்சியம் ஆகியவற்றால் அவன் மிகவும் கோபமாகயிருக்கின்றான், மேலும் அதனை அவன் மிக கவனமாக பார்வையிடுகின்றான். இதனால் இன்ஷா அல்லாஹ் கொரோனா வைரஸ்ஸை பிரார்த்தனைகளால் அழிக்க முடியும்.

அல்லாஹ்வின் அருளால், 2020 மார்ச் 24 செவ்வாய் கிழமை அன்று சலாத்துல் சுஹருக்குப் பிறகு எனக்கு ஒரு வெளிப்பாடு கிடைத்தது, நான் முசல்லாவில் அமர்ந்திருந்து, இந்த கொடிய வைரஸைப் பற்றி நிறைய துஆக்களைச் செய்தேன். அந்நேரம் நான் பின்வரும் வெளிப்பாட்டைப் பெற்றேன்.

**“பாவமும் வரம்பு மீறுதலும் நீங்காவிட்டால் கொரோனா வைரஸ் தொற்று நீங்காது. பாவத்தின் காரணமாக சூரியன் அதன் ஒளியை இழந்திருக்கிறது. அச்சமூட்டி எச்சரிப்பதற்காகவே பூமியில் இந்த தொற்றுநோய் விதைக்கப்பட்டுள்ளது.”**

கொரோனா வைரஸ்/கோவிட்-19 என்னும் தொற்று நோய், ஒரு சிறந்த அடையாளத்தைக் காட்டுகிறது. இதை நீங்கள் எளிதாக எடுத்துக் கொள்ளாதீர்கள், இறை அடையாளத்திலிருந்து முகத்தை திருப்பிக் கொள்ளாதீர்கள். ஆம்! கொரோனா வைரஸ் பரவாமலிருக்க அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை நீங்கள் கேட்க வேண்டும், கீழ்ப்படிய வேண்டும். மேலும் கொரோனா வைரஸால் பாதிக்கப்படாமல் இருக்க பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். **ஆனால் இறைவன் என்ன கட்டளையிட்டான், அந்த ஆணையை யாராலும் ஒருபோதும் முறியடிக்க முடியாது. இறைவன் தான், எல்லாம் வல்லவன், அவர்கள் விரும்பியதைச் செய்வதற்கான வல்லமை உயிரினங்களுக்கு இல்லை.**

எனவே, மருந்து அல்லது பிற தடுப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்த உங்களுக்கு தடை இல்லை. (இஸ்லாத்தால் - திருக்குர்-ஆன், சுன்னத் ஆகியவற்றால் ஊக்குவிக்கப்பட்ட அந்த நடவடிக்கைகள்) ஆனால் அவற்றை முழுமையாக நம்புவதற்கு உங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனென்றால், அதுவே இறைவிருப்பமாகிறது. யாராவது முடிந்தால், அவர் இறைவன் மீது நம்பிக்கை வைக்கட்டும், ஏனென்றால் இறைவன் மீது நம்பிக்கை வைத்திருப்பதே உறுதியான உத்தரவாதம். நம்பிக்கை மட்டுமல்ல, நேர்மையும் வேண்டும் அதாவது நேர்மையான நம்பிக்கை வைத்துக்கொள்ள வேண்டும்.

உலகெங்கிலும் பல நாடுகளும் மொத்தமாக பூட்டப்பட்டுள்ளது. (Lock Down) அலுவலகங்கள், பள்ளிகள் - மழலையர் பள்ளி, தொடக்கப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி பல்கலைக் கழகம், நிறுவனம் போன்றவைகள் - மேலும் கடைகள், சந்தைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்றவைகள் மூடப்பட்டுள்ளன. குறிப்பாக இங்கே, 2020 ஏப்ரல் 02 –ம் தேதி முதல் மொரிஷியஸ் மிக கடுமையான நிபந்தனைகளின் கீழ் கொண்டுவரப்பட்டது. நம் சக மனிதர்களுடன் தொடர்பு கொள்ளாமல் இருக்க எல்லோரும் வீட்டில் இருக்க வேண்டும். ஒரு நபர் பிற மனிதர்கள் மற்றும் உயிரினங்களுடன் தொடர்பு கொள்ளாமல், மிக கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் அவர் அந்நோயால் பாதிக்கப்பட்டவராக இருந்தால் அதன் காரணமாக நீங்களும் பாதிக்கப்படலாம். எனவே, நீங்கள் படைப்பாளனிடம் திரும்புங்கள். பிரபஞ்சத்தை படைத்த இறைவனுடன் தொடர்பு கொள்வது மிக அவசியமானதாகும். பிரபஞ்சத்தின் அதிபனுடன் நீங்கள் தொடர்பு கொள்ளும்போது கொடிய வைரஸ் உங்களைத் தாக்க முடியாது. அவன் இந்த கொடிய கொரோனா வைரஸை உதவியற்றவனாக்கி, வெளியேற்றும் கதவை மிக விரைவில் உங்களுக்கு திறந்து கொள்வான். இன்ஷா அல்லாஹ்.

வற்புறுத்தலினாலும் சக்தியினாலும் மனிதனால் கோவிட் - 19 என்னும் தொற்று நோயை மறையச் செய்ய முடியாது. அத்தகைய ஒரு எதிரியை விரட்டியடிக்க மனிதனுக்கு அதிகாரம் இல்லை. இந்த இறைசெய்தியை அனைத்து மனிதர்களுக்கும் பகிர்ந்து கொள்ள எல்லாம் வல்ல இறைவன் எனக்கு வெளிப்படுத்தியிருக்கின்றான், இறைவன் என்னிடம் இவ்வாறு தெரிவிக்கின்றான். இறைவன் கூறுகிறான். **“இந்த எதிரியின் காரணமாக கதறுங்கள், என் முன் அழுது மன்றாடுங்கள். ஏனென்றால்**

**அதைத் துரத்துவது எனது முழுமையான சக்தியால் மட்டுமே சாத்தியமாகும் என் அடியானே! இதுவே என் சட்டம்!"**

அவன் (அதன்) விரோதத்திற்கு முன்னால் நீங்கள் உதவியற்றவராக இருந்தாலும், முயற்சிகளை மேற்கொள்ளுங்கள். அதனுடன் இணங்கிவிடாதீர்கள். எப்பொழுதும் அதனுடன் போராடுங்கள். உங்களால் முடிந்தவரை போராடுங்கள். அதன் விரோதத்திற்கு எதிராக போராட்டத்தை மேற்கொள்ள என் (இறைவன்) உதவியை மன்றாடிக்கேளுங்கள். நேர்மையான இதயத்துடன் ஆன்மாவின் அடிப்பகுதியிலிருந்து நீங்கள் என் உதவியைக் கேட்கும் போது, உங்கள் கைகளை வலுவாக்கவும் அதன் விரோதத்திற்கு எதிராக ஆதிக்கம் செலுத்தவும் நான் என் சக்தியை உங்கள் கைகளுக்கு அனுப்புவேன். அப்போது வலிமை மற்றும் நேர்மையின் வாளால் அந்த எதிரியின் தலையை என் மூலம் நீங்கள் துண்டித்து விடுவீர்கள். உண்மையில், அதைக் கொல்வது நீங்கள் அல்ல, அதை கொல்வது நான்தான்.

உங்களுக்கு கூற முடியும், எங்கள் இறைவா! இதைச் செய்தது நானல்ல. இத்தகைய எதிரியை எதிர்கொள்ள இந்த வலிமையையும் சக்தியையும் நான் எங்கிருந்து பெற முடியும்? நான் ஒரு வைக்கோலை விட மிகவும் பலவீனமாகவும், ஊனமுற்றவனாகவும் இருக்கும் போது, அத்தகைய ஒரு மலையை எப்படி நான் பறித்து, கூழாங்கற்களை போல நசுக்கி, தூசி மற்றும் மண் போல காற்றில் வீச முடியும்?

அப்போது எல்லாம் வல்ல இறைவன் நம்மிடம் கூறுவான் : என் சக்தி வைக்கோலுடன் இணைந்தால், அதற்கு முன் உள்ள மலைகள் ஒரு அணுவை விட குறைவாக இருக்கும். ஆனால் நீங்கள், இந்த உதவியற்ற நிலையிலும் பலவீனத்திலும் நீங்கள் உங்கள் நம்பிக்கையை எனக்குக் காட்டியுள்ளீர்கள். அடைக்கலம் கேட்டு என் அருகில் வந்துள்ளீர்கள். என்னை நம்பி, நீங்கள் அத்தகைய எதிரியை எதிர்கொண்டீர்கள், நான் கூடவே இருக்கிறேன் என்றும் நான் அனைத்தையும் காண்கின்றேன் என்றும் எண்ணி செயல்பட்டீர்கள், இந்த காரணத்திற்காக, நான் உங்கள் பலவீனத்தை பலமாக மாற்றினேன். உங்களிடமிருந்து எல்லாவற்றையும் நான் ஏற்றுக் கொள்கிறேன், நான் உங்களுக்கு கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் உண்மையில் நான்தான் எல்லாவற்றையும் செய்தேன். ஆகையால், நான் என் அடியார்களுக்கு பலம் தருகிறேன். நான் அவர்களுக்கு வழிகாட்டுகிறேன். இதனால் என் அருள் மற்றும் வழிகாட்டுதல்கள் மூலம் அவர்கள் எதிரிகளை விரட்டுவார்கள்.

அவர்களிடமிருந்து நான் அதை ஏற்றுக்கொள்கிறேன், நான் அவர்களுக்கு கடமைப்பட்டுள்ளேன். மற்றொரு வார்த்தையில் கூறினால் நான் அவர்களுக்கு எண்ணற்ற வெகுமதிகளையும் எல்லையற்ற நன்மைகளையும் பரிசாக வழங்குவேன். அவர்களை ஆயிரம் மொழிகளில் புகழ்வேன், பாராட்டுவேன். நான் அவர்களின் பெயரில் சத்தியம் செய்கிறேன். உயிரினங்கள் மீது நான் பொழியும் கருணை அவர்கள் மீதுள்ள அன்பின் அடையாளமாக இருக்கும். என்னிடமிருந்து வரும் ஒவ்வொரு கோபமும், கிளர்ச்சியாளர்களுக்கு நான் கொடுக்கும் ஒவ்வொரு வேதனையும் என் நல்ல ஊழியர்களுக்காக நான் பழிவாங்குவதாகும். அவர்களுக்கு உதவி செய்வது எனக்கு உதவி செய்வது போலாகும்.

எவர் அவர்களைப் பார்க்கின்றாரோ அவர் என்னையே பார்க்கிறார். எவர் அவர்களை தாக்குகிறாரோ அவர் என்னையே தாக்குகிறார். எவர் அவர்களை தேர்வு செய்கின்றாரோ அவர் என்னையே தேர்வு செய்கிறார். எவர் அவர்களிடம் நட்பை ஏற்படுத்துகிறாரோ அவர் என்னிடமே நட்பை ஏற்படுத்திக் கொள்கிறார். அவர்கள் மீதான பகைமை, என் மீதான பகைமை ஆகிறது. உங்களை தாக்குகிறவன் என்னையே தாக்குகிறான். நான் மன்னிப்பதும் கருணை காட்டுவதும் அவர்களுக்கு திருப்தி அளிப்பதற்கே ஆகும். என் அடியார்கள் அனுபவித்த வேதனைகளுக்கும் துன்பங்களுக்கும் காரணமாக இருப்பவர்கள் எவர்களோ, அவர்கள் என் கடுமையான கோபத்திற்கும் நரக தண்டனைக்கும் ஆளாகிவிடுவார்கள். ஏனென்றால், நான் இறைவன், எனக்கு எதிரிகள் இல்லை. எனக்கு சமமாக வேறு எவரும் இல்லை. நான் அடியார்களை உருவாக்கி, அவர்கள் என்னிடம் வர அனுமதிக்கிறேன். இதனால் அவர்கள் என் உண்மை மற்றும் இருப்பை பிரதிபலிபித்து காட்டுபவர்களாக மாறுகின்றார்கள். அவர்களுக்கிடையே இருக்கும் இணைப்புகளை ஒருவர் விவரிக்க முடியாது. ஏனென்றால் அவர்களை ஒருவருக்கொருவர் வேறுபடுத்த முடியாது. அவர்கள் மத்தியில் வேறு சிலர் உள்ளனர். எனக்கு எதிராகவும் விரோதமாகவும் செயல்படும் சிலர்! என் அடியார்களிடம் எவர் எதிர்ப்பையும் விரோதத்தையும் காட்டுகிறாரோ அவர் என்னைத் தாக்குகிறார்.

**“இறைவனின் நண்பராகி அவனுடன் பேச விரும்பும் எவரும் இறைவனின் தூதரிடம் செல்ல வேண்டும், இறைவனுடன் இருக்க விரும்பும் ஒருவர் இறைத்தூதரின் இயக்கத்தில் இருக்க வேண்டும்”.**

ஆகவே, எதிரி என்னும் இந்த கொடிய வைரஸைப் பற்றி, எல்லாம் வல்ல இறைவன் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் எனக்கு வெளிப்படுத்தியிருந்தான். பல வருடங்களுக்கு முன்பே அதுபற்றிய எச்சரிக்கை வழங்கியிருந்தான். மருத்துவ விஞ்ஞானம் நாடுகளில் அதன் தோற்றத்தை கணிப்பதற்கும் மிக நீண்ட காலத்திற்கு முன்பே இது குறித்து நான் எச்சரிக்கை விடுத்திருந்தேன்.

கொரோனா வைரஸ் என்ற தலைப்பில் நான் பேசுகையில், அல்ஹம்துலில்லாஹ், நான் ஒரு விஷயத்தை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நேற்று 2020 ஏப்ரல் 02 –ம் தேதி அன்று மொரீஷியஸ் உள்ளூர் நேரம், காலையில் இந்த கொடிய வைரஸ் குறித்து 2020 மார்ச் 31 –ம் தேதியன்று மனித குலத்திற்கான எனது செய்தியை எங்கள் சஹீஹில் இஸ்லாம் சேனலில் அதிகார பூர்வமாக கொடுக்கப்பட்டிருந்தது. அன்றைய தினம் மொரீஷியஸில் கொரோனா வைரஸ் காரணமாக 7 இறப்புகள் நிகழ்ந்தன. மேலும் 161 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டனர். இந்த புள்ளி விவரங்கள் சேரும்போது அது எனது பிறந்த தேதியை காட்டுகிறது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. (07/01/61)

இது ஒரு வெளிப்பாடு என்று நான் கூறவில்லை. எல்லாவற்றையும் நாம் வெளிப்பாடுகளின் கணக்கில் வைக்கக்கூடாது. அது ஒரு வெளிப்பாடு இல்லாத போது அது ஒரு வெளிப்பாடு என்று நான் கூறமாட்டேன். எனவே இது குறித்து நீங்கள் சிந்திப்பதற்காக மட்டும் நான் கூறுனேன். மேலும் மாலையில், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 169 -ஐ எட்டியது. அந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. உலகளவில் 53000 –க்கும் மேற்பட்ட இறப்புகள் நிகழ்ந்துள்ளன.

மேலும் மார்ச் 25 அன்று மாலை 5.20 மணியளவில் ஒரு பெரிய நிலநடுக்கத்தைப் பற்றி எனக்கு மற்றொரு வெளிப்பாடு கிடைத்தது. (அதன் பின்னர் நான் 27 மார்ச் 2020 அன்று காலையில் பெற்ற வெளிப்பாடு மற்றும் கடந்த வாரம் எனது வெள்ளிக் கிழமை பேருரையில் நான் குறிப்பிட்டது அதை உறுதிப்படுத்துகிறது) அந்த நிலநடுக்கமானது மனிதர்கள், கிராமங்கள், வயல்கள் ஆகியவற்றிற்கு பெரிய அழிவை ஏற்படுத்தும். மேலும் பயணிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். அந்த நிலநடுக்கத்தால் மக்கள் ஆச்சரியப்படுவார்கள். நிர்வாண மனிதனுக்கு ஆடை அணிவதற்கு கூட நேரம் இருக்காது. ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பை பெற பயணிகளை ஏற்றிச் செல்லும் சிறு படகுகள், கப்பல்கள் வழிகளை மாற்ற வேண்டிய

கட்டாய நிலை உருவாகும். பூமியில் ஏறத்தாழ எல்லா இடங்களிலும் அதன் உள்தள்ளல்கள் ஏற்படும். இரத்த ஆறுகள் காரணமாக ஆறுகளின் நீர் வண்ணமயமாகும்.

கொரோனா வைரஸைப் போலவே முழுவதும் மூடப்பட்டிருக்கும். பெரியவர்கள், சிறியவர்கள் மற்றும் அனைத்து அரசாங்கங்களும் இதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டியிருக்கும்.

இந்த வெளிப்பாடுகள் உலகளாவிய பேரழிவுகளைக் குறிக்கின்றன என்பதை நான் புரிந்து கொள்கிறேன். உலகின் பல நாடுகளையும் பல இராஜியங்களையும் உள்ளடக்கிய ஒரு பெருந்தீ விபத்து கூட ஆகலாம். ஆனால் இந்த வெளிப்பாடுகள் ஒரு நிலநடுக்கத்தைப் பற்றி தான் பேசுகின்றன என்பது உண்மைதான். ஆனால் நிலநடுக்கம் போன்ற பேரழிவு உலகம் முழுவதையும் மூழ்கடிக்கும் என்பது தெளிவாகிறது. இது வெளிப்படையாக ஒரு நிலநடுக்கத்தை விட வேறு ஒன்றைக் குறிக்கிறது. நிலநடுக்கங்கள் உள்ளூர் அளவிலானவை, அது உலகளவிலானவை அல்ல. ஆனால் இந்த பேரழிவு உலகளவிலானதாக மாறும்.

இது பயணிகளுக்கு கடினமான சிரமங்களை ஏற்படுத்தும். இது ஒரு போராக இருக்க வாய்ப்பில்லை, மாறாக நிலநடுக்கமாகத்தான் இருக்கும். பயணிகளுக்கு அது வானிலை சிரமத்தை அளிக்கும் ஒன்றாக இருக்கும். மேலும் சாதாரண கடல் மற்றும் நில வழிகள் ஆபத்தானதாக இருக்கும்.

எனவே, ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமில் இருந்து விலகி இருப்பவர் எங்களை சார்ந்தவரல்ல. நீங்கள் பணக்காரர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் நினைவில் கொள்ளுங்கள். இந்த உலகத்தை விட்டு வெளியேறும் போது நாம் எதையும் நம்முடன் எடுத்துச் செல்வதில்லை. நாம் அனைவரும் நம்முடைய நம்பிக்கை மற்றும் நற்செயல்களை மட்டுமே எடுத்துச் செல்கிறோம். ஆகவே, உங்களை இறைவன் ஏற்றுக்கொள்வதற்காக நீங்கள் இறை அழைப்புக்கு செவிசாய்த்து விடுங்கள்.

29 மார்ச் 2020 அன்று மாலை 5 மணியளவில் என் அலுவலகத்தில் மார்க்கப் பணிகளில் நான் ஈடுபட்டிருந்தபோது சில அழகான வார்த்தைகள் என் உதடுகளில் வந்தன. முதலில் என் உடல் சூடாகுவதாக நான் உணர்ந்தேன். எனக்கு என்ன நிகழ்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. நான் மின்விசிறியை ஆன் செய்தேன். சில

நிமிடங்களுக்குப் பிறகு இந்த வார்த்தைகள் என் மீது மழைபொழிவது போல் பொழிந்தன. அல்ஹம்துலில்லாஹ்.

## Revelations

## வெளிப்பாடுகள்

**“நன்றியற்றவனாக, பாவமுள்ளவனாக, பொறுப்பற்றவனாக, கவனக் குறைவாக இருப்பதன் காரணமாக கடுமையான தண்டனை மற்றும் வேதனை இறைவனிடமிருந்தோ அல்லது இயற்கையிலிருந்தோ நமக்கு கிடைத்தால் நமக்கு புகார் கொடுக்கவோ அல்லது அறியாத எந்தவொரு பிரச்சினையை எழுப்பவோ முடியாது”.**

இங்கு இயற்கை என்ற வார்த்தையை பயன்படுத்தியது இறைவன் மீது நம்பிக்கை இல்லாத மக்களுக்காகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நம்பிக்கை கொண்ட மக்களே, இந்த பிரபஞ்சத்தில் நடக்கும் அனைத்தும் இறைவனின் அனுமதியிலும் அவன் கட்டளையின் கீழும் வருகின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நாங்கள் மிகவும் தனிப்பட்ட காரணத்திற்காக சீனாய் மற்றும் ஹீரா குகைக்கு சென்றிருந்தோம். இந்த வகையான தீவிரமான செய்திகள் வெளிவரும் என்று எங்களுக்கு தெரியாது. இறைவனின் நேர்மையான ஒரு அடியான் என்ற முறையில் இறைச்செய்தியை மிக ஆழமாகவும் விரிவாகவும் கூற வேண்டியது என்னுடைய கடமையாகும். எனவே, நாம் அதை தெரிவித்தோம்.

இறைவன் எங்களுக்கு சாட்சியாக இருக்கின்றான். எந்தவொரு சட்டத்தையும் ஒழுங்கையும் மீறாமலும், குழப்பங்களை உருவாக்காமலும் நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்தோம். மேலும், நாங்கள் இப்போதும் இவ்வாறு பிரார்த்தனை செய்து வருகிறோம். “எங்கள் இறைவா! இந்த தண்டனையிலிருந்து எங்களைக் காப்பாற்றி கொள்வாயாக! நாங்கள் எங்களை சீர்திருத்தி, மனிதகுலத்தில் மிக சிறந்தவர்களாக எங்களை மாற்றிக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பை எங்களுக்கு வழங்குவாயாக!” ஆமீன் சும்ம ஆமீன்.

மிகவும் கடுமையான ஒன்று நிகழும் என்பதை நேரடி செய்திகளால் உறுதிப்படுத்தலாம். தற்போதைய நிலமை ஒரு தீர்வுகட்டத்தை நோக்கி செல்வதாக

லூத் நபி (அலை) மற்றும் நூஹ் நபி (அலை) அவர்களின் வரலாறு நினைவூட்டுகிறது. இதைத் தவிர்க்க நாம் ஆச்சரியமாகவும் அற்புதமாகவும் ஏதாவது செய்ய வேண்டும். அதாவது இறை பாதுகாப்பு என்னும் வட்டாரத்திற்குள் நாம் வரவேண்டும்.

நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வும் திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு அதனதன் நேரத்தில் நடைந்தேறுகிறது. தொழில்நுட்ப அறிவியலின்படி இது மிகவும் புரிந்து கொள்ளத்தக்கது. ஆனால் நம்முடைய நம்பிக்கை, செயல்கள் மற்றும் பிரார்த்தனைகள் மூலம் மட்டுமே எல்லாவற்றையும் உலகில் இருந்து மாற்றலாம் அல்லது தாமதப்படுத்தலாம்.

எல்லோரிடமும் அன்பு எவர் மீதும் இல்லை பகைமை என்னும் தத்துவத்துடன் பூமியில் அமைதியை நிலை நாட்டும் பணியை செய்வதற்காகவே இந்த தாழ்மையான அடியானை அவனது கலீஃபத்துல்லாஹ்வாக இறைவன் அனுப்பியுள்ளான். இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும், நமது தலைமுறையினருக்கும் நல்பாடம் கற்பிக்கவும் பூமியையும் நம் தலைமுறையினரையும் காப்பாற்றவும், அமைதியுடனும் அன்புடனும் சகோதரத்துவத்தை நிலைநாட்டவும் நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். இது மிகப்பெரிய பணி, உண்மையில் இந்நூற்றாண்டில் இது மிகவும் பெரிய வேலை! இறைவா! நீ தேர்ந்தெடுத்த இந்த தாழ்மையான அடியானுக்கு உதவி புரிவாயாக! ஆமீன்.

**மனித சமுதாயமே கேளுங்கள், உங்கள் எல்லா பிரச்சனைகளையும் தீர்க்க கூடியவனும், உங்களின் எல்லாவகையான பலவீனங்கள் மற்றும் நோய்களை குணமாக்குபவனும், உங்களை மிக அதிகமாக நேசிப்பவனுமாகிய ஒரு இறைவன் உங்களுக்கு இருக்கிறான். நீங்கள் அவனை நேசிக்கமாட்டீர்களா? அவனை மட்டும் வணங்கமாட்டீர்களா? அவனுக்கு கீழ்ப்படியமாட்டீர்களா?**

எனவே இந்த வெளிப்பாடுகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டவாறு அமைந்துள்ளன. இந்த வெளிப்பாடுகளானது அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியானுக்கும், மனித குலத்துக்கும் எல்லா வகையான வடிவங்களிலும் எதிரிகளை எவ்வாறு வெல்வது என்பது குறித்து வழிகாட்டும் தகவல்களின் சங்கிலியாகிறது. இந்த எதிரி என்பது ஒரு வைரஸ் ஆகவோ அல்லது மனிதனாகவோ அல்லது சாத்தானிய ஆவியாகவோ இருக்கலாம். அதற்கு தீர்வை காண்பதற்கான வழிமுறைகளை அல்லாஹ் நமக்கு வழங்கியிருக்கிறான். அது பிரார்த்தனை மூலமாகும், அவனுடைய

குர்-ஆனிய கட்டளைகளை விடாமுயற்சியுடன் பின்பற்றுவதன் மூலமாகும், நம்முடைய அன்பான நபி அண்ணல் நபிகள் நாயம் (ஸல்) அவர்களின் சுன்னத்தை கடைபிடிப்பதன் மூலமாகும்.

அல்லாஹ்வின் ஆற்றல் வாய்ந்த உதவி இல்லாமலிருந்தால், நாம் உதவியற்றவர்களாக இருப்போம். ஆனால் அவனுடைய உதவி மற்றும் பாதுகாப்பில் இருந்தால் நாம் ஆன்மீக முறையில் பலசாலிகளாகி விடுவோம். மேலும் திருக்குர்-ஆனிலும் சுன்னாவிலும் அல்லாஹ் ஆதரிக்கும் தடுப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதன் மூலமும், அந்தந்த நாடுகளின் நல்ல குடிமக்களாக இருப்தன் மூலமும், அல்லாஹ் மீதான நம்பிக்கை மற்றும் பிரார்த்தனைகளை கடைபிடித்து மாதிரி முஸ்லீம்களாகவும் சிறந்த குடிமக்களாகவும் வாழ்வதன் மூலமும் நாம் எங்கிருந்தாலும் இஸ்லாத்தின் மதிப்பையும் கண்ணியத்தையும் மேம்படுத்துவோம். அவநம்பிக்கையாளர்கள் சுகாதாரம், தீர்க்கதரிசன பரிகாரம் மற்றும் முக்காடு அணிவது போன்ற விஷயத்தில் இஸ்லாத்தின் சிறப்பை ஒப்புக்கொள்ள நிர்பந்திக்கப்படுவார்கள். அவர்கள் ஒருமுறை முக்காடு அணிவதை விமர்சித்து, அதற்கு ஒரு தடையை கூட விதித்தனர். இப்போது உலகம் திடீரென்று முகமூடிகள் அணிந்து, தங்களை உடல் ரீதியாக காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நிர்பந்த நிலைமைக்கு ஆளாகிவிட்டது. அது முக்காடு அணிவதற்கு சமம். இது என்ன முரண்பாடு! பிந்தையது முந்தையதைவிட மேலிடம் பெற்றது.

மனித குலம் அதன் நீண்ட சோர்விலிருந்து எழுந்து, தீமைகளை கைவிட்டு, அவனுக்கு இணைவைக்காமல் அந்த ஏக இறைவனின் கயிற்றைப் பிடித்துக்கொள்ள நாம் பிரார்த்திக்கிறேன்.

துஆக்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பற்றி பேசுகையில் மொரீஷியஸ் ஜமாஅத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர் ஒருவர் நேற்று (02 ஏப்ரல் 2020) ஒரு கனவைக் கண்டார். அக்கனவில் திருக்குர் - ஆனின் சில குறிப்பிட்ட சூராக்களை ஓதிக்கொள்ள அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதில் சுமார் ஒரு டஜன் (அதாவது 12 முதல் 15 வரை) குர்-ஆன் அத்தியாயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த நபர் இந்த சூராக்களை ஓதினார். ஆனால் அந்த உறுப்பினர் அறிவுறுத்தப்பட்ட சூராக்களை மறந்தபோதெல்லாம், **இந்த சூராக்களை ஓதிய பயிற்றுவிப்பாளர் அவற்றை மீண்டும் மீண்டும் ஓதிக்காட்டினர், பின்னர் அந்த நபர் அவற்றை நன்றாக நினைவில் கொள்ள தனது விரல்களால் எண்ணி உறுதிப்படுத்தினார். இந்த அத்தியாயங்களில்**

சில சூரா அல்-பாத்திஹா 7 முறை, சூரா அல் லஹாப், சூரா அல்.ஃபீல், சூரா அன்-நஸர், சூரா அல்-அஸர் மற்றும் பல சூராக்கள் உள்ளன. அவ்வரிசையில் சூரா அல்-காபிருன், அல் இக்லாஸ், அல்-ஃபலக் மற்றும் சூரா அன்நாஸ் ஆகியவையும் உள்ளன.

எனவே இறைவன் நம் கவனத்தை ஈர்த்துக்கொள்கிறான். நமக்கு அவன் பக்கம் கவனம் செலுத்துவோம். உள்ளார்ந்த நிலையில் நேர்மையாக நமக்கு அவனை வணங்குவோம். இந்த பேரழிவுகளிலிருந்து அவன் நம்மை காப்பாற்றிய பிறகும், அவனை கைவிடாமல் இருப்போம். துன்பம் மற்றும் வேதனையிலும் கூட அவனுக்கு நன்றி செலுத்துவோம். பொறுமையாக இருப்போம். மனநிறைவின் நாட்கள் வெகு தொலைவில் இல்லை. நாம் அனைவரும் தூய்மையான, நேர்மையான இதயத்துடன் அல்லாஹ்விடம் திரும்புவோம். இன்ஷா அல்லாஹ், ஆமீன்.

**Translated by:**

**Naib Amir Azim Ahmad**

Editing & Publishing are done by:

**AMIR**

JAMAAT-UL-SAHIH-AL-ISLAM

TAMIL NADU

Ph. No: 917502272774